III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

O.S.29/2013

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Selvi. U.Dharani, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 04-04-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : வி.ஜான்வெஸ்லி | Village | : |
| Father's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்த தயாராக உள்ளளேன் என நான் ஏற்கனவே கூறியிருக்கும் நிலையில், அக்கட்டணத்தை செலுத்த உள்ளேனா என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. 08.04.2011 அன்று பிலால், கிறிஸ்டிபெல், வெங்கடேசன் மற்றும் நான் ஆகிய நால்வரையும் துரைராஜ் கொன்னூர் பதிவு அலுவலகத்திற்கு பலவந்தமாக அழைத்து சென்றார். எனது வழக்குரையில் 6 வது பத்தியில், சதீஸ் என்னை அணுகி தாவா சொத்தை நல்ல விலைக்கு விற்றுத்தருவதாகவும் ஆதலால் தனக்கு பவர் பத்திரம் எழுதி கொடுக்க என்னிடம் கேட்டதாகவும் கூறியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. எனது அறிவுறுத்தல்களின் படி சதீஸ் எனது அதிகாரம் பெற்ற முகவர் என்பதன் அடிப்படையில் துரைராஜுடன் விற்பனை ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றால் எல்லாம் அவர்களின் திட்டம், எங்களை கட்டாயப்படுத்தி செய்தார்கள். எனது வழக்குரையில் அவர்கள் திட்டம்போட்டு கட்டாயப்படுத்தி செய்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் என்னை கட்டாயப்படுத்திதான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினார்கள். அந்த கிரைய ஒப்பந்தத்தில் நான் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான்.

வா.த.சா.2 ல் சதீஸ்-ம் துரைராஜும் சேர்ந்து என்னை ஏமாற்றும் நோக்கத்துடன் கிரைய ஒப்பந்தம் மற்றும் பவர் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என நான் சொல்லவில்லை என்றால், அதை அதில் குறிப்பிட நான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். நான் தமிழில் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞர் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்தார். வா.த.சா.2 ல் மனோவாவும் பிலாலும் என்னை ஏமாற்றிவிட்டார்கள் என்றும் எனது நண்பரான சதீஸ் என்னிடம் தனக்கு பவர் கொடுத்தால் ரூ.2 கோடிக்கு அதிகமாக விற்றுத்தருவதாக கூறினார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.2 ஐ என்னிடம் காண்பிக்காமல் கையொப்பம் மற்றுமே பெற்றுள்ளார்கள். வா.த.சா.3 நான் முதலமைச்சரின் தனிபிரிவிற்கு அனுப்பிய புகார் தான். வா.த.சா.3 ல் எனது நண்பரான சதீஸிடம் பிலால் என்னை ஏமாற்றி விட்டதாக கூறினேன் என்றும் அதற்கு சதீஸ் என்னிடம் தனக்கு பவர் கொடுத்தால் ரூ.2 கோடிக்கும் அதிகமாக விற்றுத்தருவதாக கூறினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.4 ல் மனோவாவும் பிலால்அகமதும் என்னிடம் ரூ.3,20,00,000 க்கு ஒப்பந்தம் போடுவதாக கூறி ஆனால் உண்மையில் ரூ.20 லட்சத்திற்கு மட்டுமே ஒப்பந்தத்தை பதிவு செய்தார்கள் என்றும், மூன்று மாத காலத்திற்கு பதிலாக மூன்று வருட காலம் என ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுவிட்டார்கள், என நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது வழக்கறிஞரிடம் துரைராஜ் மற்றும் சதீஸ் என்னை ஏமாற்றிவிட்டதாக தமிழில் கூற எனது வழக்கறிஞர் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்ய ஏற்பாடு செய்தார். வா.த.சா.9 ல் சதீஸ் சரியாக கணக்கு கொடுக்கவில்லை என்றும் ஆதலால் அவர் பெயரிலான பவர் பத்திரத்தை ரத்து செய்வதாக கண்டுள்ளது என்றால், சாட்சி பதில் சொல்லாமல் மௌனமாக இருக்கிறார். சதீஸ் பெயரிலான பவர் பத்திரத்தை நான் எப்போது ரத்து செய்தேன் என்றால், நான் ரத்து செய்யவில்லை, அது நிகழ்வில் தான் உள்ளது. நான் சதீஸ்ன் பெயரிலுள்ள பவர் பத்திரத்தை ரத்து செய்ய நான் பதிவு அலுவலகம் சென்றேன். அங்கு சதீஸ்ம் உடன் வரவேண்டும் என சொன்னார்கள். ஆதலால் அவர் பெயரிலான பவர் பத்திரத்தை ரத்து செய்யப்பட முடியவில்லை. எந்த தேதியில் பதிவு அலுவலகத்திற்கு சென்றேன் என எனக்கு ஞாபகம் இல்லை. 2013 ம் வருடம் சென்றேன் என நினைக்கிறேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் நான் பதிவு அலுவலகம் சென்றேன். பவர் பத்திரத்தை நானும் கிறிஸ்டிபெல்லும் சதீஸ்க்கு எழுதி கொடுத்துள்ளதால் நாங்கள் இருவரும் பதிவு அலுவலகம் சென்றுதான் பவர் பத்திரத்தை ரத்து செய்ய முடியும் என்றும் கிறிஸ்டிபெல் இல்லாமல் நான் மட்டும்

பதிவு அலுவலகம் சென்றதால் அந்த பத்திரத்தை ரத்து செய்ய முடியாமல் போய்விட்டது என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சதீஸ் பெயரிலான பவர் பத்திரத்தை ரத்து செய்ய எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். 2011 ல் எனது அக்கா கிறிஸ்டிபெல் எனக்கு தாவா சொத்தில் உள்ள தனது உரிமையை எழுதி கொடுத்தார். 08.04.2011 க்கு பின்னர் விடுதலை பத்திரம் கிறிஸ்டிபெல் எனக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். 20.04.2011 அன்று கிறிஸ்டிபெல் எனக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. எனது வழக்குரையில், துரைராஜ்ன் கட்டுப்பாட்டில் ஆந்திராவில் நானும் கிறிஸ்டிபெல் இருந்ததாகவும், பத்திர பதிவு தேதிகளில் என்னை மட்டும் தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்ததாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு என்னை அழைத்து வந்த தேதிகள் 25.04.2011, 11.05.2011 மற்றும் 17.05.2011 . 20.04.2011 அன்று கிறிஸ்டிபெல் எனக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்த போது நான் பதிவு அலுவலகம் சென்றேனா என்றால் சென்றேன். தேதி ஞாபகம் இல்லை. 20.04.2011 அன்று என்னை மட்டும் தான் அழைத்து வந்தார், கிறிஸ்டிபெல்லை அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல. ஒவ்வொரு தடவையும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு என்னை மிரட்டி தான் துரைராஜ் அழைத்து வந்தார். கட்டாயபடுத்திதான் அந்த பத்திரங்களை பதிவு செய்துவைத்தார். விடுதலை பத்திரத்தையும் கிறிஸ்டிபெல்லிடம் இருந்து எனது பெயருக்கு, துரைராஜ் கட்டாயப்படுத்தி தான் வாங்கினாரா என்றால் ஆம். ஆதலால் கிறிஸ்டிபெல் எனக்கு எழுதி கொடுத்த விடுதலை பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அவர் எனக்கு மனப்பூர்வமாகதான் அப்பத்திரத்தை எழுதிக்கொடுத்தார். விடுதலை பத்திரம் கிறிஸ்டிபெல் எனக்கு எழுதி கொடுத்ததற்கு நான் அவருக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. பின்னிட்டு அந்த விடுதலை பத்திரத்தை கிறிஸ்டிபெல் ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். அந்த ரத்து துரைராஜ்ன் முன்னெடுப்பில் செய்யப்பட்டது. அவ்வாறு ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு பின்னிட்டு தெரியவந்தது. எனது வழக்கறிஞர் மூலமாக வில்லங்க சான்றிதழின் மூலமாக எனக்கு தெரியவந்தது.

(2ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).